
திருவாசகம் - 33
குழைத்தப்பத்து கதைவழியில்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# குழைத்தப்பத்து கதை வடிவில்

# ஆத்தும நிவேதனம்

# திருப்பெருந்துறையில் அருளியது

**குழைத்தால் பண்டைக் கொடுவினைநோய்**
**காவாய் உடையாய் கொடுவினையேன்**
**உழைத்தா னுறுதியுண்டோ தான்**
**உமையாள் கணவா எனை ஆள்வாய்**
**பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ**
**பிறைசேர் சடையாய் முறையோவென்**
**றழைத்தால் அருளா தொழிவதே**
**அம்மானே உன்னடியற்கே. 01**

மகேசனும் கவிதாவும் காதலர்கள். கவிதா கதிரேசனது வீட்டில் தங்கியிருந்து படித்தவள். மகேசன் அவளது அழகில் மயங்கித் திருமணம் செய்தவன். திடீரென்று கவிதாவுக்கு வினையின் விளைவால் நோய் வந்துவிட்டது. அதனால் அவளால் இயங்க முடியவில்லை. இருப்பினும் மகேசன் அவளின் மீதுள்ள அன்பைக் குறைக்கவில்லை. இருவரும் பெரும் சிவபக்தர்கள். சிவனின் அருள் தமக்கிருப்பதை நம்புபவர்கள்.

“நீங்கள் என்னை விரும்பியபோது நான் நோயில்லாமல் இருந்தேன். தற்போது முன்வினைப்பயனால் நோய் வந்து தாக்கிவிட்டது. எனினும் என்னில் உள்ள அன்பு உங்களுக்கும் சிறிதும் குறையவில்லை. இருப்பினும் மாணிக்கவாசகசுவாமிகள் சிவனைக் கேட்பதுபோல நான் உங்களைக் கேட்கிறேன். வினையின் கொடூரமான தாக்குதலால் நான் மெலிந்து வருகிறேன். அதனால் நீங்கள் என்னைக் காப்பாற்ற வேண்டும். கணவனும் மனைவியும் சிவனினதும் பார்வதியினதும் அம்சமென்று சொல்வார்கள். அதனால் நீங்கள் தானே என்னைக் காப்பாற்றியாக வேண்டும். உங்களையன்றி என்னையார் கவனிப்பார். என்னைக் காப்பாற்றுவாதால் உங்களுக்கும் பெரும் நன்மைகள் வரப் போவதில்லை. நான் ஏதாவது பிழை செய்தால் அதைப் பொறுத்துக் கொள்வதும் உங்கள் கடமை தானே. நான் சொல்கிறேன். நீங்கள் கேளாதவர்போல் இருக்கிறீர்கள். இது நியாயமா..? அது உங்களுக்குத் தகுதியானதல்ல” என்றாள் கவிதா.

**அடியேன் அல்லல் எல்லாம்முன**

**அகல ஆண்டாய் என்றிருந்தேன்**

**கொடியே ரிடையாள் கூறா**

**எங்கோவே ஆவா என்றருளிச்**

**செடிசேர் உடலைச் சிதையாத**

**தெத்துக் கெங்கள் சிவலோகா**

**உடையாய் கூவிப் பணிகொள்ளா**

**தொறுத்தால் ஒன்றும் போதுமே** **02**

"நீங்கள் என்னைத் திருமணம் செய்தபோது நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். எனது கர்மம் ஒழிந்தது என்று எண்ணினேன். அது பிழை போலத் தெரிகிறது. துன்பத்திற்கு உறைவிடமானது உடல். அது என்னை வருத்துகிறது. அதனால் என்னைக் காப்பற்ற வேண்டியது உங்கள் கடனாகும். இதை நான் சொல்லவில்லை. சிவனுக்கு மாணிக்கவாசகர் கூறுகிறார். நான் உங்களைச் சிவனாகவே கருதுகிறேன். என்னை நீங்கள் மாணிக்கவாசக சுவாமியாகக் கருதுதல் வேண்டும். சைவம் கணவனையும் மனைவியையும் சிவனும் சக்தியுமாகத் தானே கருதுகிறது. மாணிக்கவாசகர் தனது தந்தையாகச் சிவனை நினைத்துத்தானே பலவற்றையும் முறையிடுகிறார். நான் சொல்வது தவறா? தவறானால் மன்னித்துக் கொள்ளுங்கள்" அழுதாள் கவிதா.

**ஒன்றும் போதா நாயேனை**

**உய்யக் கொண்ட நின்கருணை**

**இன்றே இன்றிப் போய்த்தோதான்**

**ஏழை பங்கா எங்கோவே**

**குன்றே அனைய குற்றங்கள்**

**குணமா மென்றே நீகொண்டால்**

**என்றான் கெட்ட திரங்கிடாய்**

**எண்தோள் முக்கண் எம்மானே.** **03**

“எனது அன்புக்குரியவரே மாணிக்கவாசக சுவாமிகள், “இந்த அற்பனை நீ ஆட்கொண்டது பொய்யாகப் போய்விட்டதா? நான் செய்த குற்றங்கள் மலையை விடப் பெரியவை. அவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்டதால் உனக்கு ஏதாவது குறை வந்துவிட்டதோ?” என்று கேட்கிறார். மாணிக்கவாசக சுவாமிகளைப் போலத்தான் நான் உங்களைக் கேட்கிறேன். மலைபோன்ற பெருங் குற்றத்தை நான் செய்தபோதும் அதைப் பெரிதாக எண்ணாது என்னை மிகுந்த மகிழ்வுடன் ஏற்றீர்கள். அதில் ஏதாவது தவறு நேர்ந்துவிட்டதா..? அதனால் தான் துன்பப்படுகிறீர்களா..? முன்பே எனது நிலை உங்களுக்குத் தெரியும். தெரிந்த பின்பு தான் என்னை ஏற்றீர்கள். அதற்காக நான் எடுக்கும் பிறப்புக்கள் தோறும் நன்றியுடையவளாக இருப்பேன். இப்படித்தான் மாணிக்கவாசக சுவாமிகள் சிவன் தன்னை ஆட்கொண்டமைக்காக நன்றி கூறுகிறார். அவரது செயல் உலக மக்களுக்கு எல்லா வகையிலும் பயன்படுகிறது. இன்றல்ல எதிர்காலத்திலும் அது பயன்படும் அப்படியான வேதவாக்கு அது” என்றாள் கவிதா.

**மானேர் நோக்கி மணவாளா**

**மன்னே நின்சீர் மறப்பித்திவ்**

**வூனே புகஎன் தனைநூக்கி**

**உழலப் பண்ணு வித்திட்டாய்**

**ஆனால் அடியேன் அறியாமை**

**அறிந்து நீயே அருள்செய்து**

**கோனே கூவிக் கொள்ளுநாள்**

**என்றென் றுன்னைக் கூறுவதே.** **04**

கதிரேசன் கவிதாவுக்கு நோய் ஏற்பட்டதை அறிந்து கவிதாவைப் பார்க்க வந்தார். மகேசன் அவரை மகிழ்வுடன் வரவேற்று அவரை உள்ளே அழைத்துச் சென்றான்.

“மகளே, இன்பதுன்பங்கள் யாவும் எம் வினைப்படி உரிய நேரத்தில் வந்தே தீரும். நீ உனது திருமணத்தைப் பற்றிக் கற்பனை கூடச் செய்யவில்லை. உனது சிவபக்தியினால் சிவன் உனக்கு இப்பெருவாழ்வை அருளியுள்ளான். அதை நினைத்து மகிழ்ச்சி கொள். வேண்டாத கற்பனைகளால் உன்னைத் துன்புறுத்தாதே. நோய்கள் வினைப்படி துன்புறுத்தவே எம்மை நாடி வருகின்றன. இதைச் சிவபக்தையான உன்னால் புரிந்து கொள்ள முடியாவிட்டால் நீ சிவபக்தை அல்ல. இன்பதுன்பங்கள் வரும்போது

அவற்றை நாம் அனுபவிக்காது அதைச் சிவனிடம் ஒப்படைத்தால் அவன் எமக்காக அதை அனுபவிப்பான். அதனால் மனம் ஆறுதலடையும். உடல் உபாதை குறையும். இதெல்லாம் தெரிந்த நீயா கவலை கொள்கிறாய். சில நோய்கள் சில நாட்களில் மாறும். சில நோய்கள் மாறப் பல நாட்கள் செல்லும். இதை நீ புரிந்து கொள்ளல் வேண்டும். நீ சிவபக்தை சிவனிடம் மாணிக்கவாசக சுவாமிகள் தனது நிலையை முறையிடுவதைப் போல நீயும் முறையிடு. மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வது போல, "உனது சொருபத்தை மறந்திருந்த வேளை இவ்வுடலில் என்னை நீ புகுத்தினாய். எனது மயக்கத்தை அகற்றி மீண்டும் எப்போது உன்னோடு சேர்ப்பாய்." என்று சிவனைக் கேட்கிறார். இந்த உடலை நாமா விரும்பிப் பெற்றோம்…? இன்னாருக்கு நான் பிள்ளையாகப் பிறப்பேன் என்று என்னால் தீர்மானிக்க முடியுமா..? அதையல்ல எதை எம்மால் தீர்மானிக்க முடியும்..? ஒரு தீயது வரப்போகிறது என்று முன்பே தெரிந்தால் அறிவுள்ள நாம் அதை விலக்கிவிடுவோமல்லவா..? அப்படி விலக்கினால் எப்படி வினைப்பயனை அனுபவிக்க முடியும்..? வினை என்பது வித்து. அது உறக்க நிலையில் சிலகாலம் இருக்கும். வேளை வந்ததும் முளைத்து விடும். அதைத்தடுக்க முடியாது. இந்த உடல் அழியுமே தவிர உயிர் அழிவதில்லை. என்று உயிர்கள் படைக்கப்பட்டனவோ அத்தனையும் மாறி மாறிப் பிறப்பெடுக்கும் என்று எமது சமயம் கூறுகிறது. உயிர்கள் இரண்டு நிலைக்குட்படும். ஒன்று திரும்பத் திரும்பப் பிறப்பெடுப்பது. அடுத்து இறைவனோடு சேர்வது. அதைத்தான் மாணிக்கவாசக சுவாமிகள் சிவனைக் கேட்கிறார். மீண்டும் மீண்டும் எனதுயிரை உடலோடு சேர்த்து வைக்கிறாயே. எப்போது என்னை உன்னோடு சேர்த்துக் கொள்ளப் போகிறாய் என்று கேட்கிறார். அந்த நிலைக்குவர எம்மால் முடியாது. ஆனால் துன்பத்தை அனுபவிக்காத ஒரு பிறப்பை அடைய எம்மால் முடியும். அதற்காகத் தான் ஒழுக்கமாக வாழ வேண்டும். தான தர்மங்கள் செய்ய வேண்டும். சிவனை வணங்க வேண்டும் என்று ஞானிகள் கூறுகின்றனர்" அதனால் நோய் வந்துவிட்டதென்று வருந்தாது, கவலைப்படாது சிவனிடம் வந்து நோயைத் தீர்த்து வைக்கும்படி இரந்து கேள். உனது நோய் மாறிவிடும்" என்றார் கதிரேசன்.

"ஐயா, கவிதா சிவனைச் சந்தேகிக்கிறாள். நோய்காரணமாகத் நான் தன்னை விட்டுநீங்கி விடுவேனோ என்ற பயம் தான் அவளுக்கு நோயைவிட அதிக துன்பத்தைக் கொடுக்கிறது. சைவசமயம் கணவன் மனைவியைச் சிவனாகவும் அம்மையாகவும் உருவகித்துள்ளது. இதைச் சாதாரணமான மக்கள் புரியாதிருக்கலாம். ஆனால் சிவபக்தையான இவளுக்குப் புரியாமலிருப்பது எனக்கு வியப்பைத் தருகிறது" என்றான் மகேசன்.

**கூறும் நாவே முதலாக்**

**கூறுங் கரணம் எல்லாம்நீ**

**தேறும் வகைநீ திகைப்புநீ**

**தீமை நன்மை முழுதும்நீ**

**வேறோர் பரிசிங் கொன்றில்லை**

**மெய்ம்மை உன்னை விரித்துரைக்கில்**

**தேறும் வகைஎன் சிவலோகா**

**திகைத்தால் தேற்ற வேண்டாவோ. 05**

"மகளே, மாணிக்கவாசக சுவாமிகள் சிவனிடம் முறையிடுவதை அறிந்து வைத்துள்ள நீ அதன் உட்பொருளை உணரவில்லை. அவர் என்ன சொல்கிறார், "உலகின் உற்பத்திக்கும், ஒழுக்கத்திற்கும் காரணமான அவன். அவனுக்கு அன்னியமானதென்று எதுவுமில்லை. அத்துடன் அவனது நடைமுறையைத் தடுக்கக்கூடிய சக்தியும் எதுவும் இல்லை. உலகத்தைப் படைப்பதும் பின் அழிப்பதும் பின் ஒடுக்கவதும் அவன். எல்லாம் நீ. நன்மையும் நீ, தீமையும் நீ. இதைத்தவிர வேறு எதையும் என்னால் கூற முடியாது என்று மாணிக்கவாசக சுவாமிகளே சொல்கிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது நன்மையையும் தீமையையும் தடுப்பவன் அவனென்று தெரியவில்லையா..? ஏன் நன்மையும் தீமையும் வருகின்றன. ஒன்றைக் காரணமின்றிக் கொடுப்பவனா சிவன். மனிதர்கள் பாவம் என்று அறிந்த பின்பு பலவற்றைத் தெரிந்து கொண்டே செய்கின்றனர். இது பாவம் என்றோ, தாம் அதைச் செய்கிறோம் என்றோ தெரியாமல் பல பாவங்கள் செய்யப்படுகின்றன. ஒருவர் இரப்பவன் ஒருவனுக்குப் பணம் கொடுக்கிறார். அவன் அப்பணத்திற்கு மதுபானத்தை வாங்கிக் குடித்துவிட்டு மனைவியையும், பிள்ளைகளையும் கடுமையாகத் தாக்குகிறான். மனைவியும் ஊரவரும், இனத்தவரும் அவனுக்குப் பணம் கொடுத்தவரைத் திட்டுகின்றனர். அவர் மனைவி பிள்ளைகளை அவன் கொடுமைப்படுத்த வேண்டுமென்றா கொடுத்தார். அவன் மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வதைப்போல அவன் தனது நாவால் அனுதாபம் வரக்கூடிய வகையில் பேசிப் பாவம் செய்கின்றான். இப்படிப் பல காரணங்களால் பாவம் செய்யப்படுகிறது. வாழ்க்கை என்பது தொடர்கதை. அதற்கு முன் வரலாறு, பின் வரலாறு என்பன உண்டு. அதை யாரும் சிந்திப்பதில்லை. மனிதப் பிறப்பை இறைவன் உயிர்களுக்குக் கொடுக்கும்போது ஆறாவது அறிவையும் சேர்த்துக் கொடுக்கிறான். ஆறாம் அறிவு என்பது பகுத்தறிவு. அந்தப் பகுத்தறிவை மிருகங்களுக்கும்

உண்டாக்கலாம். இராமாயண காலத்திலேயே மிருகங்கள் யாவும் பகுத்தறியும் தன்மை கொண்டனவாக இருந்தன. அதற்குக் காரணம் அவை உயர்ந்த மனிதர்களுடன், ஞானிகளுடன், முனிவர்களுடன், அறிவாளிகளுடன் பழகியமையே ஆகும். அதை நாம் புராணங்களில் இருந்தும், வரலாறுகளில் இருந்தும் அறியலாம். இப்போது பத்திரிகை மூலம் அறியலாம். ஆறாவது அறிவை இறைவன் தந்தது ஒரு செயலைச் செய்யும்போது அச்செயலால் உண்டாகும் நன்மை தீமைகளைப் பகுத்தறியவே. ஆனால் தற்போதைய மனிதர்கள் தமது பகுத்தறிவைச் சுயநலனுக்காகப் பாவித்து நன்மையடையவதாக நினைத்துத் துன்பப்படுகின்றனர். அதனால் தான் மாணிக்கவாசக சுவாமிகள் சிவனைப் பார்த்து நன்மையும் நீ, தீமையும் நீ என்கிறார். நன்மைக்காகத் தந்த பகுத்தறிவைத் தீமைக்காகப் பயன்படுத்தலாகாது. அவ்வறிவின் மூலம் எதிர்காலத்தைப் பகுத்தறிந்து வாழ்ந்து தன்னை அடைய வேண்டும் என்பதே சிவனது விருப்பம். இதை மாணிக்கவாசகசுவாமிகளும், ஞானிகளும், முனிவர்களும், ரிஷிகளும் தத்துவார்த்தமாகக் கூறியபோதும் யார் அதைப் பற்றிச் சிந்திக்கிறார்கள்" என்றார் கதிரேசன்.

**வேண்டத்தக்க தறிவோய் நீ**

**வேண்ட முழுதுந் தருவோய்நீ**

**வேண்டும் அயன்மாற் கரியோய்நீ**

**வேண்டி என்னைப் பணிகொண்டாய்**

**வேண்டிநீயா தருள்செய்தாய் யானும்**

**அதுவே வேண்டின் அல்லால்**

**வேண்டும் பரிசொன் றுண்டென்னில்**

**அதுவும் உன்றன் விருப்பன்றே. 06**

"மகளே, தினமும் திருவாசகத்தைப் படித்து வருகிறாய். படிப்பவர்கள் அதில் கூறியபடி நடக்க வேண்டும், வாழ வேண்டும். அதன் தத்துவத்தை உணர வேண்டும். இல்லாவிட்டால் பயனிருக்காது. ஓர் உணவுப்பொருள் வாங்கினால் அதைச் சமைத்து உண்ணவேண்டும். சமைத்து உண்ணப் பிடிக்காவிட்டால் அதை வாங்கக்கூடாது. எனக்கு வேண்டியது என்ன? வேண்டாதது என்ன என்பதெல்லாம் உனக்குத் தெரியும் என்று பாடிவிட்டு அதை நம்பாவிட்டால் அப்பாடலைப் படிப்பதால் என்ன பயன் உண்டாகும். மாலுக்கும் அயனுக்கும் வெளிப்படாத சிவன் தன் அன்பர்களுக்கு வெளிப்படுவான் என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். எனக்கு வேண்டியது என்ன என்று தெரிந்த நீ

எனக்குத் தருவதை விருப்புடன் தானே தருவாய் என்கிறார். உயிர்களுக்குச் சிவன் அன்னியமானவன் அல்ல என்று ஒரு சிவனடியான் எந்நேரமும் எண்ணினால் தான் அவனோடு எவ்வேளையிலும் தொடர்பில் இருக்க முடியும். கேட்டு அவனிடமிருந்து பெறுவதை யோகம் என்பர். பெற்றதை வைத்துக் காப்பாற்றுவது கோமமாகும். சிவனது அருள் ஒன்றுதான் என்றும் நிலைத்திருப்பது, கூட வருவது. ஏனையவை யாவும் இறைவனால் அளிக்கப்பட்டாலும் கூட வராதவை. பொன் பொருளை இறைவன் அளித்தால் அவை கூட வராதென்று உணர்ந்து அதனைச் சிவசேவை செய்வதன் மூலம் அவற்றையும் கூட அழைத்துச் செல்லலாம். ஒருவர் செய்யும் தானதர்மங்கள் மட்டுமல்ல, உதவிகளும் கூட வரும். இல்லாத ஒருவனுக்குத் தொழில் செய்ய உதவுதல், தான் செய்து கொடுத்தல், நல்ல ஆலோசனை வழங்கல் யாவும் கூட வரும். அத்துடன் ஒழுக்கமான இல்வாழ்வும் கூட வரும். இல்வாழ்வால் தான் சகல தர்மங்களும் காப்பாற்றப்படுகின்றன என்பதை மகேசன் உணர்ந்தவன். அதனால் உன்னைக் கைவிட மாட்டான்” என்றார் கதிரேசன்.

**அன்றே என்றன் ஆவியும்**

**உடலும் எல்லா முங்**

**குன்றே அனையாய் என்னைஆட்**

**கொண்டபோதே கொண்டி லையோ**

**இன்றோர் இடையூ றெனக்குண்டோ**

**எண்தோள் முக்கண் எம்மானே**

**நன்றே செய்வாய் பிழை செய்வாய்**

**நானோ இதற்கு நாயகமே. 07**

“கவிதாவைப் பீடித்திருந்த நோய் முற்றாக நீங்கி விட்டமையால் அவளும் மகேசனும் ஆச்சிரமத்திற்கு வந்தனர். அப்போது ஆச்சிரமத்திற்கு வந்திருந்த பக்தர்களுக்குச் சுவாமியார் உரையாற்றிக் கொண்டிருந்தார்; “சிவனடியார்களே, உங்கள் மனதைச் சிவனிடம் ஒப்படைத்துவிட்டுச் செயலாற்றுங்கள். சிவன் உங்களது செயல்களைக் கண்காணிப்பான். ஓர் உயிர் இறுதியாகச் செய்யவேண்டியது தனது உயிரை ஈசனிடம் ஒப்படைத்தலாகும். இறைவனிடம் அடைக்கலம் புகுந்த உயிரை இறைவன் பாதுகாத்து உரிய வேளைகளில் உரியவற்றைச் செய்வான். அப்படிச் சரணடைவோருக்கு இடையூறுகள், துன்பங்கள் யாவும் வினைப்படி வந்தாலும் அதனால்

பாதிப்பிராது” என்று சுவாமியார் சொல்லக் கவிதாவுக்கு மெய்சிலிர்த்தது. துன்பம் வினைப்படி வருகிறது. எவ்வளவுதான் கவனமாக வாழ்ந்தாலும் வினைப்படி விபத்து வரவேண்டுமானால் அது வரத்தான் செய்யும். அதற்கு இறைவன் பொறுப்பல்ல. ஆனால் இறைவனிடம் அடைக்கலம் புகுந்தால் வரும் துன்பம் அடைக்கலம் புகுந்தவரை அடையப் பயப்படும். இது எப்படியென்றால் ஒரு செல்வாக்குள்ளவனின் நண்பனுக்கும் செல்வாக்குள்ளவனுக்குள்ள மதிப்பு இருக்கும். அவனோடு முரண்பட்டால் செல்வாக்குள்ளவன் தலையிட்டுப் பாதிப்பை உண்டு பண்ணுவான். இங்கே சகல செல்வாக்கும் உள்ளவன் சிவன். அதனால் அவரிடம் சரணடை” என்று கதிரேசன் சொன்னது அவளது நினைவுக்கு வந்தது. மெய்மறந்து சுவாமியாரின் பேச்சை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்த தனது கணவனின் முகத்தைப் பார்த்தாள். அது பூரிப்புடன் மகிழ்ந்திருந்தது. “சிவனே, என்றைக்கு உன்னை வணங்கத் தொடங்கினேனோ அன்றைக்கே நான் உன்னிடம் அடைக்கலமாகி விட்டேன். அதனால் எனக்கு வரும் துன்பங்கள் இன்னொருவகையில் இன்பமாகின்றது. எனக்கு நோயைத் தந்தது நீ. அதன் மூலம் எனது மனதில் இருந்த சந்தேகங்களுக்கு விடை கிடைத்து விட்டது. அதனால் பெருமையான இன்பத்தை அனுபவித்து மகிழ்வுடன் இருக்கிறேன். இனி எந்தக் கவலையும் எனக்கில்லை. கவலை வந்தாலும் அதை உன்னிடம் முறையிட்டால் அது மறைந்து விடும். இறைவா உனது கருணைக்கு அளவே இல்லை” என்று கண் மூடினாள். விழித்திரைக்குள் கதிரேசன் தோன்றினார். அவரின் கழுத்தில் நாகம் படமெடுத்து ஆடியது.

**நாயிற் கடையாம் நாயேனை**

**நயந்து நீயே ஆட்கொண்டாய்**

**மாயப் பிறவி உன்வசமே**

**வைத்திட்டி ருக்கும் அதுவன்றி**

**ஆயக் கடவேன் நானோதான்**

**என்ன தோஇங் கதிகாரங்**

**காயத் திடுவாய் உன்னுடைய**

**கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே** **08**

“சிவனடியார்களே, மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; “நாயினும் பார்க்கக் கேவலமான என்னை வலிய வந்து ஆட்கொண்டாய். இனி மாயப்பிறவிகளால்

எனக்குத் துன்பமில்லை. ஏனென்றால் மாயப்பிறவிகளைக் கொடுப்பவன் நீ தானே. அதனால் உன்னிடம் அடைக்கலமான பின்பு எனக்கு எப்படி உன்னால் துன்பத்தைத் தருகின்ற பிறவிகளை எனக்கு வழங்க முடியும். நான் உன் வசமாகி உன்னோடு கலந்தமையால் நான் உயர்வடைந்து விட்டேன். இனிக் கவலைப்பட எனக்கு எந்த விடயமும் இல்லை. ஏனென்றால் நீ என்னை எந்த நிலையில் வைத்தாலும் எனக்குக் கவலை இல்லை. அதுவே பெரும் இன்பமாக எனக்கு அமையும். உனது நீங்காத அருளைப் பெற எனக்கு உடலோடு வாழ்ந்தாலும், உனது திருவடி நிழலில் வாழ்வதையே அது ஒக்கும். அதனால் கவலைப்படமாட்டேன். துன்பப்படமாட்டேன். உன் திருவடியே கதியென்று எந்த நினைவும் இல்லாமல் உன் நினைவோடு இருப்பேன்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். இதிலிருந்து ஒன்று தெரிய வருகிறது. உடலோடு வாழ்ந்தாலும் சிவனின் அருள் இருந்தால் பேரின்ப நிலையை அடையலாம் பின் உடலை விட்டு விட்டு அவனை அடையலாம். உலகைப் பாருங்கள். சிவநினைவோடு அவனின் அருளை நம்பி வாழ்வோர் மிக்க மகிழ்வுடன் வாழ்கின்றனர். அவர்களுக்குத் தீய நினைவுகள் மனதில் வரச் சிவன் விடமாட்டான். ஏனென்றால் அவன் சிவனின் கட்டுப்பாட்டில் வாழ்கிறான். ஓர் ஆசிரியருக்கு மாணவன் அடங்கி நடப்பதுபோல் உயிர் சிவனுக்கு அடங்கி நடக்கும் தன்மையைத் தானாகவே பெற்றுவிடும். இது இயல்பு. சிவனின் அருளைப் பெற்றவர்கள் உடலோடு கூடி வாழலாம். அது அவர்களது மனதைப் பொறுத்தது" அதைக் கேட்ட கவிதாவின் கண்கள் கலங்கின. உடல் சிலிர்த்தது. சிவனிடம் தன்னை அடைக்கலமாகக் கொடுத்துவிட்டதாக மகேசன் அடிக்கடி சொல்வான் அது உண்மை. அவனால் இப்போது தீயவற்றை நினைக்கக்கூட முடிவதில்லை. "சிவனே, நான் என்ன புண்ணியம் செய்து மகேசனைக் கணவனாக அடைந்தேன் என்று யோசிப்பேன். இன்று அது புரிந்து விட்டது. என்றோ நான் உன்னிடம் அடைக்கலமடைந்து விட்டேன். அதனால் தான் எனது வாழ்வு இன்பமாக இருக்கிறது" என்று நினைத்தாள் கவிதா.

**கண்ணார் நுதலோய் கழலிணைகள்**
**கண்டேன் கண்கள் களிகூர**
**எண்ணா திரவும் பகலும்நான்**
**அவைவே எண்ணும் அதுவல்லால்**
**மண்மேல் யாக்கை விடுமாறும்**
**வந்துன் கழற்கே புகுமாறும்**
**அண்ணா எண்ணக் கடவேனோ**
**அடிமைசால அழகு டைத்தே. 09**

“சிவனடியார்களே, மாணிக்கவாசக சுவாமிகள் சொல்வதைக் கேளுங்கள். அவர் சொல்கிறார்; “எப்பொழுதும் உன்னையும், உன் பெருமைகளையும் நினைத்து மகிழ்வதே எனது மகிழ்வாகும். எனக்கு வாழ்க்கையைப் பற்றிப் பிரச்சினை எதுவும் இல்லை. உன்னை அடைந்து வாழும் வாழ்வைப் பற்றியும் பிரச்சினை இல்லை. நான் துன்ப துயரங்களில்லாத ஓர் உயிர்; நீ என்னுள் இருக்க நான் உன்னோடு இருக்கத் துன்ப துயரங்கள் எப்படி வரும். நீ மலையை விட உயர்ந்தவன். பிரளயகால வெள்ளமேற்பட்டாலும், மலையை, அதுவும் நீ வாழும் மலையை மூழ்கடிக்க முடியுமா? அதனால் தான் துணிந்து சொல்கிறேன். உன்னை நினைக்க மனம் இனிக்கிறது. உன்னைக்காண மனம் மலர்கிறது. கண்கள் களிப்படைகின்றன. இந்த நிலை எனக்குப் போதும்” என்கிறார்.

சுவாமியாரின் பேச்சு இனிமையாகக் கவிதாவின் மனதை வருடியது. நாயிற்கடையனாய் இருந்த என்னை உனது அருள்மலையாக உயர்த்திவிட்டது. அசைக்க முடியாத ஓர் இன்ப வாழ்க்கையை எனக்குத் தந்தருளியுள்ளாய். அந்த வாழ்க்கை தேனாக உன்னருளால் இனிக்கிறது. இந்த இனிமையை யாராலும் கெடுத்துவிட முடியாது. ஏனென்றால் இதைத் தந்தது நீ. சிவனே இதற்காக நான் எத்தனை பிறவிகள் எடுத்து உனக்கு நன்றி கூறுவது” என நினைத்தாள் கவிதா.

**அழகே புரிந்திட் டடிநாயேன்**
**அரற்று கின்றேன் உடையானே**
**திகழா நின்ற திருமேனி**
**காட்டி என்னைப் பணிகொண்டாய்**
**புகழே பெரிய பதம்எனக்குப்**
**புராண நீதத் தருளாயே**
**குழகா கோல் மறையோனே**
**கோனே என்னைக் குழைத்தாயே.** **10**

“சிவனடியார்களே, மாணிக்கவாசக சுவாமிகள் சிவன் தன்னை ஆட்கொண்டமையால் மிக்க மகிழ்வடைந்து அவனையும், அவனது பெருமைகளையும் வர்ணித்து மகிழ்கிறார். ஒரு தாய் தனது குழந்தையினது விளையாட்டை ரசித்து மகிழ்வது போலவும், ஒரு காதலன் தனது காதலியின் அழகைப் புகழ்ந்து வர்ணிப்பது

போலவும் மிக்க மகிழ்வுடன் வர்ணிக்கிறார். “சிவனே, நீ பேரழகன். மிக மிகப் பழமையானவன் என்றும் இளமையானவன். உனக்கு புறம்பாக என்னை ஒரு தனிப்பிறவியாக வைத்திருந்ததன் பயனாக நான் துன்புற்று வாழ்ந்தது உனது திருவிளையாடலாகும். அதனால் என் உள்ளம் பண்பட்டது. நான் பெற்ற பெரும் பேறாகும். இது ஒரு தாய் தனது மகவைப் புகழ்வது போலல்லவா இருக்கிறது. இது அன்பின் உச்சநிலை; அன்பின் உச்சத்தில் இருக்கும்போது மகிழ்வுடன் பேசத் தோன்றும். இறைவன் மாணிக்கவாசக சுவாமிகளை ஆட்கொண்டமையால் அவர் மகிழ்வின் உச்சத்தில் இருந்திருக்கிறார் என்பது அவரது பாடல்களைப் படிப்பவர்களுக்கு விளங்கும். அவர் வர்ணித்தபோதும் இல்லாதவற்றைப் புகழ்ந்து கூறவில்லை. இறைவனின் உண்மையான பெருமைகளையே கூறுகிறார். அதைப் படிப்போர்தான் வர்ணனை என்கின்றனர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

*திருச்சிற்றம்பலம்.*